**கவனிக்க**.– *19.08.2011 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி ( II அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1721 - 2011 අගෝස්තු මස 26 වැනි සිකුරාදා - 2011.08.26**

*1721 ஆம் இலக்கம் – 2011 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (I) – பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | - |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | 594 |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க அறிவித்தல்கள் | 594 |
| விலைக் கட்டளைகள் | - |
| இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | - |
| இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | - |
| வரவு செலவுத் திரட்டுக்கள் | 595 |
| அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 604 |
| மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் | - |
| மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தில், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை – நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கான விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2011, செத்தெம்பர் மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2011, ஓகத்து மாதம் 19 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# சனாதிபதியின் நியமனங்களும் பிறவும்

*2011 இன் இல. 367*

டிஜஆர்எவ்/ஆர்ஈசீரீ/272/ஏவை.

**இலங்கைத் தரைப்படை - நிரந்தரப் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரவாணைக்கு நியமனம் செய்தல்

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர்கள் குறிப்பிட்டிருக்கும் திகதி முதல் இலங்கைத் தரைப்படையின் நிரந்தரப் படையில் லெப்டினன்ட் வரிசைப் பதவியில் அதிகாரவாணைக்கு நியமனம் செய்தலும் அத்திகதி முதல் இலங்கைத் தரைப்படை பொதுச் சேவைச் சிறப்பணிக்கு உள்ளடக்குதலை அங்கீகரிப்பதில் அதியுத்தமராம் சனாதிபதி அவர்கள் களிகூர்ந்துள்ளார்கள் :-

(அ) கமத்தொழில் உத்தியோகத்தர்கள் (கப்ரின்) 2010.09.30 ஆந் திகதி முதல்

திசாநாயக்க முதியன்சேலாகே ஹேமலால் சம்பிக குமாரதிலக
திசாநாயக முதியன்சேலாகே சுரங்க உதய பண்டார
வில்லேரகே துசார உபசாந்த பெரேரா

(ஆ) கமத்தொழில் உத்தியோகத்தர்கள் (லெப்டினனட்) 2010.09.30 ஆந் திகதி முதல் :

பிரன்டி கம்பலகே கசுன் எரன்த
ஜகத் பிரியன்த விஜேதுங்க
வனசிங்க ஆரச்சிகே தொன் ருவன் சம்பத் அதிகாரி

(இ) கமத்தொழில் உத்தியோகத்தர் (லெப்டினனட்) 2010.10.15 ஆந் திகதி முதல் :

ஹல்கஹ கமராலலாகே ஜனக பிரசாத் குமார

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

பாதுகாப்பு அமைச்சு,
கொழும்பு,
2011, யூலை 29.

8-705

*2011 இன் இல. 368*

**தேசிய மாணவர் படையணி**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரவாணைக்கான நியமனங்கள்

பின்வரும் பெயருடையோர் கீழே குறிப்பிடப்படும் திகதியிலிருந்து குறிப்பிடப்பட்டுள்ள சிரேஷ்டத் தன்மையின் பிரகாரம் தேசிய மாணவப் படையணியில் அதிகாரவாணைக்கு நியமிப்பதில் அதியுத்தமராம் சனாதிபதி அவர்கள் களிகூர்ந்துள்ளார்கள்:-

(அ) 2010, செத்தெம்பர் மாதம் 15 ஆந் திகதியிலிருந்து இரண்டாம் லெப்டினன்களாக :

(1) செல்வி கொடிகமகே நதீஷா பிரியதர்ஷனி
(2) திரு. மஹரூப் நிஹல் ஹுசைன்
(3) திரு. அப்துல் கபூர் மொகமட் ராபீ
(4) திருமதி உளபனயளாகே அனுஷா தரங்கனி குணசிங்க

(ஆ) 2010, தற்காலிக கப்டன்களாக 05 ஆந் திகதி திசெம்பர் தொடக்கம் அதிகாரவாணைக்குட்பட்டவர்கள் :

(1) செல்வி நாணாயக்கார வர்னகுலசூரிய இலேகுட்டிகே ஜீவனி மதுகா தேசமன் பிரனாந்து
(2) திரு. வீரசிங்க பதிரனகே நிலுகா தில்ருக் வீரசிங்க
(3) திரு. தேவகிரி கபுராலலாகே கமலதிலக தேவகிரி
(4) திரு. விபுல குலதுங்க
(5) திருமதி நாநாயக்கார மாபொடுவான அப்புகே துலாரி தீபிகா

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

பாதுகாப்பு அமைச்சு,
கொழும்பு,
2011.

8-613

# அரசாங்க அறிவித்தல்கள்

**மட்/மண்டூர் ஸ்ரீ கந்தசுவாமி ஆலய வருடாந்த உற்சவம் - 2011**

மட்/மண்டூர் ஸ்ரீ கந்தசுவாமி ஆலய வருடாந்த உற்சவம் 2011.08.23 ஆந் திகதி இரவு 8.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி அதனைத் தொடர்ந்து 2011.09.12 ஆந் திகதி காலை 10.00 மணிக்கு தீர்த்தோற்சவம் நடைபெற்று அன்றைய தினம் இரவு 9.00 மணிக்கு கொடி இறக்கத்துடன் இந்நிகழ்வு நிறைவு பெறும்.

27.05.1949 ஆந் திகதிய 5886 ஆம் இலக்க அரச வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட விதிகள் இக்கால வேளையில் அமுலில் இருக்கும் என்பதை பொது மக்களின் தகவலுக்காக அறியத்தருகின்றேன்.

உ. உதயஸ்ரீதர்,
பிரதேச செயலாளர்.

பிரதேச செயலகம்,
போரதீவுப்பற்று.

8-657

**கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்**

*கால்நடை, மருந்து கட்டுப்பாட்டு அதிகாரியின் அறிவித்தல்*

*1992 ஆம் ஆண்டின் 59 ஆம் இலக்க விலங்கு நோய் சட்டத்தினால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கு இயைய இச்சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டுள்ள கால்நடை மருந்துக் கட்டுப்பாட்டு அதிகாரக்குழு காலர்நடை மருந்து பதிவு செய்தலின் ஏற்றுக்கொள்ளப்படும் கால எல்லை 03 வருடமாகவும் கால்நடை தடுப்பு மருந்திற்காக 02 வருட மாகவும் வழங்குவதற்கு தீர்மானித்துள்ளது. மேலும் எவ்விதத்திலும் ஏற்றுக் கொள்ளப்படும் கால எல்லையை பெற்றிராத, தற்போது பதிவுசெய்துள்ளோர்க்கு புதுப்பித்தல் நியமித்தும் இத்தேதி முதல் ஆறு மாத காலத்திற்கு சலுகைக் காலம் ஒன்று வழங்கப்பட்டுள்ளது.*

*இத்தீர்மானம் தொடர்பில் மேலதிக விளக்கங்களை பதிவாளர், கால்நடை மருந்து கட்டுப்பாட்டு அதிகார சபை, கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் த. பெ. இலக்கம் 13, கெட்டம்பே, பேராதனை என்பவரிடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.*

*டாக்டர் டபிள்யூ. கே. டி. சில்வா,*
*பணிப்பாளர் நாயகம்.*

*கா. உ. சு. திணைக்களம்,*
*த. பெ. இலக்கம் 13,*
*பேராதனை.*

*8-622*

**வருடாந்த தொகை மதிப்பீட்டிற்கு ஆய்வு மேற்கொள்வதற்குமான அரசாங்க மருந்து விநியோகப் பகுதியை முடுதல் (2011)**

*வருடாந்த தொகை மதிப்பீட்டிற்கு ஆய்வு மேற்கொள்வதற்குமான 2011 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் 2011 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரைக்கும் (இரு நாட்களும் உட்பட) மருத்துவக் களஞ்சியம் மூடப்பட்டு இருக்குமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது. (களஞ்சியப்பகுதி மட்டும்).*

*இக்கால கட்டத்தில் வலி அகற்றும் போதை மருந்துகள் அபின் கலவைகள் போன்ற அத்தியாவசிய மருந்துவகைகள் தவிர்ந்த (வேறு வகையான மருந்து வகைகளுக்குமான கோரிக்கைகள் எவையும் கவனிக் கப்படமாட்டாதென்பதை மாகாண சுகாதார சேவை பணிப்பாளர்கள், பிரதி மாகாண சுகாதார சேவை வைத்தியசாலை பணிப்பாளர்கள், விசேட சிகிச்சை பிரிவுப் பணிப்பாளர்கள், மத்திய அரசின் மருந்தகங் களுக்கு பொறுப்பானவர்கள், பாதுகாப்பு படை வைத்திய உத்தியோகத் தர்கள் (விமானப் படையினர், தரைப்படையினர், கடற்படையினர் பொலிஸ் உத்தியோகத்தர்களுடன் தொடர்புபட்ட மருத்துவ சேவைப் பணிப்பாளர்கள்) கவனிக்கும்படி இத்தால் கேட்டுக்கொள்ளப்படு கின்றீர்கள்.*

*வைத்தியர் கமால் ஜயசிங்க,*
*வைத்திய அத்தியட்சகர்,*
*வைத்திய விநியோகப் பகுதி.*

*வைத்திய விநியோகப் பகுதி,*
*சுகாதார சேவைகள் திணைக்களம்,*
*357, வண. பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை,*
*கொழும்பு 10.*
*2011.08.09.*

*8-624*

# வரவு செலவுத் திரட்டுக்கள்

**கொழும்பு பல்கலைக்கழகம்**

உயிரிரசாயனவியல் , மூலக்கூற்று உயிரியல் மற்றும் உயிரியற்தொழினுட்ப நிறுவகம்

***2009 திசெம்பர் 31 ஆந் திகதியன்றுள்ளவாறான ஐந்தொகை***

*(தொகைகள் கிட்டிய ரூபாய்களில் தரப்பட்டுள்ளன.)*

| | 2009<br>ரூபா ச.<br>என்பீவீ | 2008<br>ரூபா ச.<br>என்பீவீ |
|---|---|---|
| நடைமுறையற்ற சொத்துகள் | | |
| அலுவலக தளபாடங்களும் உபகரணங்களும் | 2,954,031 | 2,840,845 |
| கணனிகள் | 1,057,093 | 835,100 |
| ஆய்வுக்கூட கற்பித்தல் உபகரணங்கள் | 10,693,129 | 17,352,614 |
| பொருத்துகைகள் | 66,194 | 75,885 |
| ஆய்வுக்கூட கருவிகள் | 737,547 | 1,125,833 |
| நூலக நூல்களும் சஞ்சிகைகளும் | 329,959 | 386,298 |
| | 15,837,953 | 22,616,576 |
| முதலீடுகள் - நன்கொடை நிதி | 1,753,161 | 1,442,880 |
| | 17,591,113 | 24,059,456 |

| | 2009<br>ரூபா ச.<br>என்பீவீ | 2008<br>ரூபா ச.<br>என்பீவீ |
|---|---|---|
| **நடைமுறைச் சொத்துகள்** | | |
| முதலீடுகள் | 15,771,444 | 14,701,408 |
| பணியாளர் கடன் | 1,544,690 | 1,491,803 |
| முற்பணக் கணக்கு | 2,042,573 | 2,228,722 |
| ஏனைய கிடைக்க வேண்டியவைகள் | 102,700 | 121,161 |
| அழைப்பு வைப்புக்களிலான முதலீடுகள் | 8,250,000 | 6,750,000 |
| வங்கி மீதிகள் | 2,285,736 | 3,440,809 |
| | 29,997,143 | 28,733,903 |
| **மொத்தச் சொத்துகள்** | 47,558,256 | 52,793,359 |
| **மூலனத்தால் நிதியளிக்கப்பட்டவை** | | |
| செலவு செய்யப்பட்ட மூலதன மானியம் | 6,052,753 | 4,826,865 |
| செலவு செய்யப்படாத மூலதன மானியம் | 2,941,550 | 3,760,380 |
| அன்பளிப்புகளும் நன்கொடைகளும் | 9,056,119 | 17,305,958 |
| | 18,050,422 | 25,893,203 |
| **ஒதுக்கங்கள்** | | |
| வரவு செலவுக் கணக்கு | 14,358,964 | 10,894,488 |
| **மட்டுப்படுத்தப்பட்ட நிதிகள்** | | |
| நன்கொடை நிதி | 1,818,380 | 1,508,100 |
| ஆய்வு மானியங்கள் | 8,009,566 | 9,513,088 |
| நிறுவக அபிவிருத்தி நிதி | 879,249 | 676,214 |
| 2010 இல் எம் எஸ் சீ ஆய்வுக் கருத்திட்டங்கள் | 655,000 | 1,830,000 |
| | 11,362,195 | 13,527,402 |
| **நடைமுறைப் பொறுப்புகள்** | | |
| ஏற்பட்ட செலவுகள் | 1,897,193 | 981,103 |
| பணிக்கொடைக்கான ஏற்பாடு | 1,266,873 | 1,167,414 |
| மீளச் செலுத்த வேண்டிய ஆய்வுகூட வைப்புகள் | 594,000 | 300,000 |
| ஏனைய மீளச் செலுத்த வேண்டிய வைப்புகள் | 58,610 | 29,750 |
| | 3,816,675 | 2,478,266 |
| | 47,588,256 | 52,793,359 |

......................................,
சிரேஷ்ட உதவி பதிவாளர்,
சிரேஷ்ட கணக்காளரினால் அதற்காக தயாரிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டது.

......................................,
பணிப்பாளர்,
முகாமைத்துவ சபையின் சார்பாக.

## கொழும்பு பல்கலைக்கழகம்

உயிரிரசாயனவியல், மூலக்கூற்று உயிரியல் மற்றும் உயிரியற்தொழினுட்ப நிறுவகம்

**2009 திசெம்பர் 31 ஆந் திகதியன்று முடிவுற்ற ஆண்டுக்கான வரவு செலவுக் கணக்கு**

(தொகைகள் கிட்டிய ரூபாய்களில் தரப்பட்டுள்ளன.)

| | 2009<br>ரூபா ச. | 2008<br>ரூபா ச. |
|---|---|---|
| **வருமானம்** | | |
| மீண்டு வரும் செலவினத்திற்கான அரசாங்க மானியம் | 27,850,000 | 30,000,000 |
| மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பிற்கான அரசாங்க மானியம் | 1,000,000 | 1,600,000 |
| அன்பளிப்புச் செய்யப்பட்ட சொத்துக்களை திருப்பிச் செலுத்துதல் | 9,952,782 | 9,467,795 |
| ஆய்வு மானியங்கள் | 3,364,376 | 3,564,025 |
| திரட்டிய வருமானம் | 4,796,732 | 3,036,179 |
| வட்டி வருமானம் | 1,278,271 | 825,232 |
| ஏனைய வருமானங்கள் | 246,875 | 358,723 |
| | 48,489,036 | 48,851,955 |

| | 2009<br>ரூபா ச. | 2008<br>ரூபா ச. |
|---|---|---|
| **கழிக்குக : செலவு** | | |
| தனிப்பட்ட வேதனாதிகள் | 9,142,526 | 8,141,119 |
| போக்குவரத்து | 239,073 | 431,332 |
| வழங்கல்கள் | 6,701,508 | 6,326,047 |
| பராமரிப்புச் செலவு | 5,202,322 | 5,099,034 |
| ஒப்பந்தச் சேவைகள் | 10,946,549 | 9,881,231 |
| ஏனைய மீண்டுவரும் செலவுகள் | 2,586,626 | 1,137,438 |
| நிறுவக அபிவிருத்தி நிதி | 160,500 | 407,775 |
| பெறுமானத் தேய்வு | 10,089,022 | 9,467,795 |
| | 45,068,126 | 40,891,772 |
| செலவினத்திற்கு மேலான வருமான மிகை | 3,420,909 | 7,960,183 |
| **வரவு செலவு ஒதுக்கீட்டுக் கணக்கு** | | |
| வரவு செலவு கணக்கிலிருந்து முன் கொண்டுவரப்பட்ட மீதி | 3,420,909 | 7,960,183 |
| வரவு செலவு கணக்கு முன் கொணரப்பட்ட மீதி | 10,894,488 | 2,979,654 |
| முன்னைய ஆண்டு தொடர்பான செவ்வையாக்கல்கள் | 43,567 | (45,349) |
| ஐந்தொகைக்கு கொண்டுவரப்பட்ட மீதி | 14,358,964 | 10,894,488 |

## கொழும்பு பல்கலைக்கழகம்

உயிரிரசாயனவியல், மூலக்கூற்று உயிரியல் மற்றும் உயிரியற்தொழினுட்ப நிறுவகம்

### 2009 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவுற்ற ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று

| | ரூபா ச. | ரூபா ச. |
|---|---|---|
| **வருடத்திற்கான மிகை** | 3,420,909 | |
| கூட்டுக : நிதிகளை இடம்பெயர்க்காத விடயங்களுக்கான சீராக்கல்கள் | | |
| பணிக்கொடைக்கான ஏற்பாடு | 99,459 | |
| முதலீடுகளிலிருந்து வட்டி | (1,278,217) | |
| நிறுவக அபிவிருத்தி நிதிக்கு மாற்றப்பட்டது | 160,500 | |
| பதிவழிக்கப்பட்ட சொத்துகள் | | |
| பெறுமானத் தேய்வு | 136,240 | |
| முன்னைய ஆண்டு சீராக்கல்கள் | | |
| தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னதான செயலாற்று மிகைகள் | 2,538,891 | |
| கிடைக்கவேண்டியவைகளில் வீழ்ச்சி | 151,723 | |
| செலுத்த வேண்டியவைகளில் அதிகரிப்பு | 1,238,950 | |
| செயற்படு நடவடிக்கைகளிலிருந்தான நிகர காசுப்பாய்ச்சல் | | 3,929,564 |
| **முதலீட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | | |
| நிலையான சொத்துகள் பெற்றுக்கொள்ளல் | (3,266,830) | |
| முதலீடுகளில் அதிகரிப்பு | (1,380,316) | |
| முதலீடுகளிலிருந்து வட்டி | 1,278,217 | |
| | | (3,368,929) |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்து காசுப்பாய்ச்சல்** | | |
| மூலதனச் செலவுக்கான அரசாங்க மானியம் | 2,110,000 | |
| மட்டுப்படுத்தப்பட்ட நிதிகள் | 2,325,708 | |
| | | (215,708) |

| | ரூபா ச. | ரூபா ச. |
|---|---|---|
| | | 344,927 |
| **காசு, காசுக்கு நிகரானவற்றில் ஏற்பட்ட நிகர அதிகரிப்பு** | | |
| இக்காலப்பகுதியின் ஆரம்பத்திலிருந்த காசு மற்றும் காசுக்கு நிகரானவைகள் | | 10,190,808 |
| இக்காலப் பகுதியின் இறுதியிலிருந்த காசு மற்றும் காசுக்கு நிகரானவைகள் | | 10,535,736 |

## கொழும்பு பல்கலைக்கழகம்

உயிரிரசாயனவியல் , மூலக்கூற்று உயிரியல் மற்றும் உயிரியற்தொழினுட்ப நிறுவகம்

### 1. 2008 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவுற்ற ஆண்டுக்கான முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள்

#### 1.1 கணக்கீட்டு அடிப்படை

இந்நிதிக் கூற்றுகள் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தினால் அறிவிமுகப்படுத்தப்பட்டதும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டதுமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கும் கணக்கீட்டு நியமங்களுக்கும் அமைவான வரலாற்று ரீதியான கணக்கீட்டு அடிப்படைகளைக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளன.

#### 1.2 வெளிநாட்டு நாணயங்களை மாற்றுதல்

வெளிநாட்டு நாணயத்திலான கொடுக்கல் வாங்கல்கள் அனைத்தும் கொடுக்கல் வாங்கல்கள் செய்யப்பட்ட திகதியன்றுள்ள நாணய மாற்றும் விகிதங்களில் கணக்கிலிடப்படுகின்றன. அத்தகைய கொடுக்கல் வாங்கல்களைப் பூர்த்தி செய்வதன் விளைவாக ஏற்படும் இலாபங்கள் அல்லது நட்டங்கள் வருமானக் கூற்றில் இனங்காணப்படும் வெளிநாட்டு நாணயங்களில் காட்டப்பட்ட நிதிச் சொத்துக்களும் பொறுப்புகளும் ஐந்தொகைத் தயாரிக்கப்பட்ட தினத்தில் நிலவிய மாற்று வீதங்களில் காட்டப்பட்டுள்ளன.

#### 1.3 வருவாய் இனங்காணல்

(i) *அரசாங்க மானியங்கள் (மீண்டு வரும்)*

மீண்டு வரும் செலவினங்கள் தொடர்பான அனைத்து மானியங்களும் ஒதுக்கீடு செய்யப்பட்ட தினத்தில் அங்கீகரிக்கப்பட்டன.

(ii) *அரசாங்க மானியங்கள் (மூலதனம்)*

சொத்து பொறி மற்றும் உபகரணம் ஆகியவற்றின் கொள்வனவு தொடர்பான மானியங்கள் நடைமுறையற்ற பொறுப்புகளில் ஒத்திவைக்கப்பட்ட வருமானங்களாக காட்டப்பட்டதோடு சம்பந்தப்பட்ட சொத்துக்களின் எதிர்பார்க்கப்பட்ட வாழ்வுக்காலத்தினடிப்படையில் ஒரு நேர்கோட்டில் வருமானக்கூற்றில் வரவு வைக்கப்பட்டன.

(iii) *பாடநெறி கட்டணம்*

கல்வி போதிக்கும் காலத்தினடிப்படையில் கட்டணங்கள் இனங்காணப்படுகின்றன. பல்வேறு நிதிக்காலப்பகுதிகளுக்கு அத்தகைய ஒதுக்கங்களை மேற்கொள்வதற்கான போதுமான தகவல்கள் இல்லாதவிடத்து ஓர் காசு அடிப்படையிலான வருமானமாக கட்டணங்கள் பதியப்படும்.

(iv) *முதலீட்டு வருமானம்*

முதலீட்டு வருமானம் கிடைக்கின்ற அடிப்படையில் பதியப்படும்.

#### 1.4 சொத்துகளும் அவற்றின் மதிப்பீட்டு அடிப்படைகளும்

*சொத்துக்கள் பொறிகள் மற்றும் உபகரணங்கள்*

சொத்துக்கள் பொறிகள் மற்றும் உபகரணங்கள் அவற்றின் மீது ஏற்பாடு ஏதேனும் இடைநேர்விளைவான செலவுகளோடு சேர்த்து கொள்வனவுக் கிரயத்தில் பதியப்படும். சொத்துக்கள் ஒன்று திரண்ட பெறுமானத் தேய்வுகளை நீக்கிய கிரயத்தில் பதியப்படும் கொடையாகக் கிடைத்த சொத்துக்கள் அவற்றின் நியாய விலையில் பதியப்பட்டுள்ளன.

*பழுதடைதல்*

ஒரு சொத்தின் பெறுமதித்தொகை அதிலிருந்து அறவிடப்படக்கூடிய தொகை அளவிற்கு உடனடியாக குறைத்து எழுதப்படுகின்றது. அத்தகைய குறைப்புகள் உடனடியாக ஒரு செலவாகக் காட்டப்படும்.

*விற்பனையின்போது ஏற்படும் இலாபம் அல்லது நட்டம்*

விற்பனையின் போது ஏற்படும் இலாபம் அல்லது நட்டம் சொத்துக்கள் கொண்டிருக்கும் பெறுமதியை ஒப்பிடுவதன் மூலம் தீர்மானிக்கப்படும். இவை வருமானக்கூற்றில் உள்ளடக்கப்படும்.

*பின்னர் ஏற்படும் செலவு*

பின்னர் ஏற்படும் செலவு சொத்து கொண்டுள்ள பெறுமதியில் பதியப்படும் அல்லது அச்சொத்துடன் தொடர்புபட்ட எதிர்காலப் பொருளாதார நன்மைகள் அந்நிறுவனத்திற்கு வந்து சேரும் என்பதும் அச்சொத்தினுடைய கிரயம் நம்பத்தகுந்த வகையில் மதிப்பிடப்பட முடியும் என்பது சாத்தியமானதாகவிருக்குமிடத்து பொருத்தமானவாறு தனிச்சொத்தாகப் பதியப்படும். ஏனைய அனைத்து பழுதுபார்த்தல்களும் பராமரித்தல்களும் அவை ஏற்பட்ட நிதிக்காலப்பகுதியில் வரவுக் கூற்றில் பதியப்படும்.

*பெறுமானத் தேய்வு*

கொள்வனவு திகதிகள் தெரிந்த சொத்துகளுக்கு பூர்த்தியடைந்த மாதங்களின் எண்ணிக்கை அல்லது அத்தகைய சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்ட திகதியிலிருந்து பாவிக்கப்பட்ட மாதங்களின் எண்ணிக்கையினடிப்படையில் வழங்கப்படுகின்ற சரியான கொள்வனவு திகதி தெரியாத சொத்துக்களுக்கு அவை கொள்வனவு செய்யப்பட்ட முழு ஆண்டுக்குமான பெறுமானத் தேய்வு வழங்கப்படும். சொத்துக்களின் மதிப்பிடப்பட்ட பயன்தரு வாழ்நாளின் மாதங்களில் விகிதாசாரத்தில் விற்பனை செய்யும் ஆண்டில் பெறுமானத் தேய்வு வழங்கப்படும். மதிப்பிடப்பட்ட பயன்தரு வாழ்வுக்காலத்தினைப் பின்வரும் அடிப்படையில் பதிவழிக்கும் ஒரு நேர்கோட்டு அடிப்படையில் சொத்து, பொறி மற்றும் உபகரணங்கள் மீதான பெறுமானத் தேய்வு வழங்கப்படும்.

| | |
|---|---|
| பொருத்துகைகள் | ஆண்டொன்றுக்கு 10% |
| அலுவலக தளபாடங்களும் உபகரணங்களும் | ஆண்டொன்றுக்கு 10% |
| கணனி | ஆண்டொன்றுக்கு 20% |
| ஆய்வுக்கூட மற்றும் கற்பித்தல் உபகரணங்கள் | ஆண்டொன்றுக்கு 20% |
| ஆய்வுக்கூட கருவிகள் | ஆண்டொன்றுக்கு 20% |
| நூலக நூல்களும் சஞ்சிகைகளும் | ஆண்டொன்றுக்கு 20% |

### 1.5 பெற வேண்டியவைகள்

பெற வேண்டியவைகள் அவை கிடைக்கும் என மதிப்பிடப்பட்ட தொகைகளில் காட்டப்படும்.

### 1.6 காசும் காசுக்கு நிகரானவைகளும்

காசும் காசுக்கு நிகரானவைகளும் என்பது காசு, வங்கி மீதி மற்றும் குறுகிய கால மூலதனம் ஆகியவற்றை உள்ளடக்கும்.

### 1.7 காசுப்பாய்ச்சல் கூற்று

காசுப்பாய்ச்சல் கூற்றுக்கள் காசுப்பாய்ச்சல் டற்றின் நோக்கத்திற்காக "நேரில் முறைமை"யைப் பன்படுத்தி தயாரிக்கப்பட்டுள்ளன. காசும் காசுக்கு நிகரானவைகளும் என்பது காசு, வங்கி மீதி மற்றும் குறுகிய கால வைப்புகள் ஆகியவற்றை உள்ளடக்கும்.

### 1.8 ஊழியர்களுக்கான நன்மைகள்

*அறுதியிட்ட நன்மைகள் திட்டம்*

1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவுச் சட்டத்தின் கீழ் இளைப்பாற்றுப் பணிக்கொடைக்கான முழுமையான ஏற்பாடு கணக்குகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இச்சட்டத்தின் கீழ் பணிக்கொடைக் கொடுப்பனவிற்குத் தகுதி பெறுவதற்கு ஊழியர்கள் தொடர்ச்சியாகக் குறைந்த பட்சம் ஐந்து வருட கால சேவையைப் பூர்த்தி செய்திருக்க வேண்டுமெனினும், சகல ஊழியர்களும் குறைந்தது ஐந்து வருட காலத்திற்காகவாவது தொழில் புரிவார்கள் என்ற அனுமானத்தின் பேரில் தொழில் தொடங்கிய தினத்திலிருந்து அதற்கான ஏற்பாடு மேற்கொள்ளப்படுகின்றனது.

*நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புத் திட்டம் - ப. சே. நி. மற்றும் ஊ. ந. நி. :*

ஊழியர்கள் பல்கலைக்கழக சேமலாப நிதியத்தினதும் ஊழியர் நம்பிக்கை நிதியத்தினதும் உறுப்பினர்களாவர். நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புத் திட்டமான ப. செ. நி., ஊ. சே. நி. மற்றும் ஊ. ந. நி. ஆகியவற்றுக்கான பங்களிப்புகள் அவை ஏற்பட்ட வகையில் செலவுகளாக வரவுக்கூற்றில் பதியப்படும்.

*1.9 **ஒப்பீட்டுத் தகவல்***

*இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக ஒப்பீட்டுத் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன.*

*பணிப்பாளர்*

*கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட உயிரியல் இரசாயனவியல் , மூலக்கூற்று உயிரியல் மற்றும் உயிரியற்தொழினுட்ப நிறுவகம்*

*கொழும்புப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட உயிரியல் இரசாயனவியல் , மூலக்கூற்று உயிரியல் மற்றும் உயிரியற்தொழினுட்ப நிறுவகத்தின் 2009, திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(2) ஆம் பிரிவு மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின்படி கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை*

*கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட உயிரியல் இரசாயனவியல் , மூலக்கூற்று உயிரியல் மற்றும் உயிரியற்தொழினுட்ப நிறுவகத்தின் 2009 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 18 ஆம் பிரிவின் பிரகாரம் சட்டமாக்கப்பட்ட 2003 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட உயிரியல் இரசாயனம், மூலக் கூறு உயிரியல் மற்றும் உயிரியல் தொழில்நுட்ப நிறுவக கட்டளைச் சட்டத்தின் 17 ஆம் பிரிவு பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) மற்றும் III ஆம் பிரிவுகள் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதியதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3), (4) மற்றும் (7) ஆம் உப பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. இவ்வறிக்கையானது பல்கலைகழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(2) ஆம் பிரிவின் படியும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7) (ஏ) ஆம் பிரிவின் பிரகாரம் வழங்கப்படுகிறது. எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.*

*1.2 **நிதிக்கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவத்தின் பொறுப்புகள்***

*இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய போதிய தவறான கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கூற்றுக்களைத் தயாரிப்பது மற்றும் நியாயமாகச் சமர்ப்பிப்படுவதற்கு உரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை திட்டமிடல், அமுலாக்கல் மற்றும் செயற்படுத்தல், பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவுசெய்து பிரயோகித்தல், சந்தர்ப்பங்களுக்கு உகந்த வகையில் நியாயமாக கணக்கீட்டு மதிப்பீடுகளைத் தயாரித்தல் என்பன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.*

*1.3 **கணக்காய்வின் நோக்கெல்லையும் அபிப்பிராயத்துக்கான அடிப்படையும்***

*எனது கணக்காய்வு பரிசோதனைகளின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீதுஅபிப்பிராயமொன்றைத் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பித்த நிதிசார் கூற்றுக்களின் மீளாய்வு கொடுக்கல் வாங்கல்களினது மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லயையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளப்பட கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையரைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிசார் கூற்றுக்கள் பொருண்மையான பிறள் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக் கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்டது. நிதிசார் கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, நிதிசார் கூற்றுக்களினைத் தயாரிகையில் முகாமையினால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல் அவற்றின் ஒட்டுமொத்தவெளிப்படுத்தல்களின் மதிப்பீடு போன்றவற்றினைக் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது உயர் அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வகையில் கணக்காய்விற்குத் தேவையான போதியளவு தகவல்களும் விளக்கமளிப்புக்களும் என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டன. அதற்கமைய எனது அபிப்பிராயத்துக்கு ஏற்ற அடிப்படையொன்று எனது கணக்காய்வின் மூலம் வழங்கப்பட்டுள்ளது என்பது எனது நம்பிக்கையாகும். 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றன.*

***2. நிதிக் கூற்றுக்கள்***

***2.1 அபிப்பிராயம்***

*எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் நான் பெற்றுக்கொண்ட தகவல்களுக்கும் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட உயிரியல் இரசாயனம், மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரியல் தொழில்நுட்ப நிறுவகம் 2009, திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு உரிய கணக்குப் புத்தகங்களை பராமரித்து வந்திருந்தது என்றும், இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டவாறு விடயங்களால் நிதிக்கூற்றுகளுக்கு ஏற்படும் தாக்கங்களை*

தவிர 2009, திசெம்பர் 31 இல் உள்ளபடி கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட உயிரியல் இரசாயனம், மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரியல் தொழினுட்ப நிறுவகத்தின் நிலைவரம் மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளிலிருந்தான நிதிசார் விளைவு மற்றும் காசோட்டம் என்பவற்றை உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்கியதாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்றும் நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 போதிய அதிகாரத்தினால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1994 யூன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்திற்கு முரணாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட சுற்றுநிருபத்திற்கு இணங்க இரண்டாம் மற்றும் மூன்றாம் மொழிகள் தேர்ச்சிக்காக ஒரு உத்தியோகத்தருக்கு 2009 ஆம் ஆண்டில் ரூபா 8,820 தொகை படிகளாகச் செலுத்தப்பட்டிருந்தது. மேற்கூறிய படிகள் கொடுப்பனவு அரசாங்க விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்கியிருக்கவில்லை என பொது முயற்சிகள் பணிப்பாளர் நாயகமும் தேசிய வரவு செலவுத்திட்ட பணிப்பாளர் நாயகமும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்குத் தெரிவித்திருந்த போதிலும் கொடுப்பனவுகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ஆ) கல்விசார் படிகளை சம்பளங்களுடன் சேர்த்து தவறுதலாக கணிப்பீடு செய்ததன் காரணமாக பல்கலைக்கழகங்கள் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு ரூபா 80,386 தொகையான மிகைக் கொடுப்பனவு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 3. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 நிதிசார் மீளாய்வு

#### 3.1.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீண்டுவரும் செலவுகளுக்கான அரசாங்க மானியத்தினைக் கணக்கிலெடுத்துக் கொள்வதற்கு முன்னர் மீளாய்வாண்டிற்கான நிறுவனத்தின் செயற்பாடுகள் ரூபா 25,429,090 பற்றாக்குறை ஒன்றினை விளைவித்திருந்ததுடன் ஒப்பிடுகையில் முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 23,639,817 ஆக இருந்தது. மீண்டுவரும் செலவுகளுக்கான ரூபா 28,850,000 தொகையாக அரசாங்க மானியத்தினைக் கணக்கிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டதன் பின்னர் மீவாய்வாண்டிற்கான பற்றாக்குறை ரூபா 3,420,909 மிகையாக மாற்றப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளுக்காகப் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 31,600,000 தொகையான அரசாங்க மானியத்தின் காரணமாக அவ்வாண்டின் பற்றாக்குறை ரூபா 7,960,183 மிகையாக மாற்றப்பட்டிருந்தது.

### 3.2 செயற்பாட்டு மீளாய்வு

#### 3.2.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன :-

(அ) மீளாய்வாண்டின் போது இரண்டு பட்டப்பின்படிப்பு கற்கை நெறிகள் (விஞ்ஞான முதுமானி) நடாத்தப்பட்டன. பதிவுசெய்த மாணவர்களின் மொத்த எண்ணிக்கை பன்னிரண்டு ஆக இருந்தது. மேற்கூறப்பட்ட எண்ணிக்கையான மாணவர்களில் ஒரு கற்கை நெறிக்கு சமூகமளிப்பதில்லை எனவும் மற்றொரு மாணவன் 2010 ஆம் ஆண்டில் கற்கை நெறியினைத் தொடர்வதற்கு அனுமதியினைப் பெற்றிருந்தார். ஒரு மாணவனுக்கான சராசரிக் கிரயம் ரூபா 362,232 ஆக இருந்தமையினை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 56,064 தொகையான அதிகரிப்பு ஒன்றினைச் சுட்டிக்காட்டுகின்றது.

(ஆ) தத்துவவியல்முதுமானியில் பட்டப்பின்படிப்பு கற்கை நெறிக்காக பதிவு செய்தமாணவர்களின் எண்ணிக்கை 15 ஆக இருந்ததுடன் ஒரு மாணவர் மாத்திரம் பதிவு செய்திருந்தார். பட்டப்படிப்பை பூர்த்தி செய்திருந்தார்கள் 2009 ஆம் ஆண்டில் இரண்டு மாணவர்கள் மாத்திரம் பாட நெறிகளின் காலம் முழுநேரம் / பகுதி 03 ஆண்டுகளிலிருந்து 05 ஆண்டுகள் வரையாக இருந்தன.

(இ) தத்துவவியல் கலாநிதி கற்கை நெறிக்கு பதிவுசெய்த மாணவர்களின் எண்ணிக்கை 06 ஆக இருந்ததுடன் ஒரு மாணவன் மாத்திரம் பட்டப்படிப்பினைப் பூர்த்தி செய்திருந்தார். கற்கை நெறிக் காலம் (முழுநேரம்/பகுதிநேரம்) 03 ஆண்டுகளிலிருந்து 05 ஆண்டுகள் வரையாக இருந்தது..

(ஈ) 2009 ஆம் ஆண்டின் இறுதியில் பட்டப்படிப்பு கற்கை நெறிகளைத் தொடர்ந்து வெற்றிகரமாகப் பூர்த்தி செய்த மாணவர்களின் எண்ணிக்கை 35 ஆக இருந்ததுடன் இது தத்துவவியல் முதுமாணியில் 03, விஞ்ஞான மற்றும்

அணுமூலக்கூறு வாழ்க்கை முதுமானியில் 18, செலூவார் மற்றும் மொலகுலார் இம்முனுலொஜி இன் விஞ்ஞான முதுமானியில் 14 என்பவற்றை உள்ளடக்கியிருந்தது.

(உ) 09 துறைகளை உள்ளடக்குகின்ற முப்பத்தொரு ஆராய்ச்சி செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அதில் 09 செயற்திட்டங்களின் ஆராய்ச்சி நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் அவை தொடர்பான அறிக்கைகள் வழங்கப்பட்டிருந்தன. 22 செயற்திட்டங்களின் ஆராய்ச்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(ஊ) பட்டப்பின்படிப்பு கற்கை நெறிகளுக்காக 20 பகுதிநேர விரிவுரையாளர்களின் சேவைகள் பெற்றுக்கொள்ளப்பட்டன. அந்த விரிவுரையாளர்கள் 243.15 மணித்தியாலங்கள் விரிவுரைகளை வழங்கியிருந்ததுடன் பகுதிநேர விரைவுயையாளர்கள் மீது இடம்பெற்ற பகுதிநேர கிரயம் ரூபா 176,012 ஆக இருந்தது. எனவே ஒரு மணித்தியாலயத்திற்கான கிரயம் ரூபா 724 ஆக இருந்தது.

(எ) மீளாய்வாண்டின் போது பதின்மூன்று பட்டப்பின்படிப்பு கற்கை நெறிகளுக்காக பரீட்சைகள் நடாத்தபட்டிருந்ததுடன் 55 மாணவர்கள் அதற்காகத் தோற்றியிருந்தார்கள். அப்பரீட்சையின் பெறுபேறுகள் 2009 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்தன.

**4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் காலத்துக்குக் காலம் பணிப்பாளரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. படிகளின் கொடுப்பனவு தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

.

எஸ். ஸ்வர்ணஜோதி,
கணக்காய்வாளர் தலைமை அதிபதி.

**உயிரிரசாயனவியல் , மூலக்கூற்று உயிரியல் மற்றும் உயிர்தொழினுட்பவியல் நிறுவகம்**

திரு. ஸ்வர்ணஜோதி
கணக்காய்வாளர் நாயகம்,
கணக்காய்வாளர் நாயகத் திணைக்களம்,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2010, யூன் 5.

அன்புள்ள ஐயா,

**கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட உயிரிரசாயனவியல் , மூலக்கூற்று உயிரியல் மற்றும் உயிர் தொழினுட்பவியல் நிறுவகத்தின் 2009 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவுற்ற ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் பற்றிய கணக்காய்வாளர் நாயகத்தின் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் பிரிவு 108(2) மற்றும் 1971 ஆம் ஆண்டில் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பிரிவு 13(7) (அ) ஆகியவற்றிற்கு அமைவான அறிக்கை**

2010, ஏப்பிறல 26 ஆந் திகதியிடப்பட்ட சீஈ/சீ/ஐபீஎம்பீபீ/09/எஃப்/ஏ என்ற இலக்கமுடையதுமான மேல் குறிப்பிட்ட அறிக்கை தொடர்பானது.

**2. நிதிக் கூற்றுக்கள்**

**கருத்துரை**

2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரை

2.2.1 கொடுக்கல் வாங்கல் போதுமான அதிகாரத்துவ அனுமதிகளினால் ஆதாரப்படுத்தப்படவில்லை.

(அ) பகமாஆகு சுற்றறிக்கைக்கமையவே கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டன. அத்தகைய கொடுப்பனவுகள் அரசாங்க சட்ட திட்டங்களுக்கு முரணானவை எனக்கூறும் சுற்றறிக்கையொன்று பகமாஆகு விடமிருந்து எமக்குக் கிடைக்கவில்லை. முந்தைய ஆண்டில் வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கமைய பகமாஆகுவிடமிருந்து மீண்டும் அறிவுறுத்தல்கள் கோரப்பட்டிருந்தபோதும் இதுவரை எவ்வித அறிவித்தல்களும் எமக்குக் கிடைக்கவில்லை.

(ஆ) பகமாஆகுவினால் விடுக்கப்பட்ட சுற்றறிக்கைக்கமையவே சம்பந்தப்பட்ட கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டது. அத்தகைய கொடுப்பனவு அரசாங்க சட்ட திட்டங்களுக்கு முரணானது எனக் கூறும் சுற்றறிக்கையெதுவும் பகமாஆகுவிடமிருந்து எமக்குக் கிடைக்கவில்லை. பகமாஆகுவிடமிருந்து மீண்டும் அறிவுறுத்தல்கள் கோரப்பட்டிருந்தபோதும் இதுவரை எவ்வித அறிவுறுத்தல்களும் எமக்குக் கிடைக்கவில்லை.

**3. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 நிதிசார் மீளாய்வு**

3.1.1 நிதிசார் பெறுபேறுகள்

இணங்குகிறோம்.

**3.2 செயற்பாட்டு மீளாய்வு**

3.2.1 செயலாற்றுகை

(அ) 2009 ஆம் ஆண்டு பயன்படுத்தப்பட்ட பொருட்களின் அதிகரித்த விற்பனை, விலை மற்றும் நடத்தப்பட்ட பரீட்சைகளின் எண்ணிக்கை அதிகரிப்பு ஆகியவற்றின் காரணமாகவே மாணவர் ஒருவருக்கான சராசரி செலவு 2008 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2009 இல் ரூபா 56,064 வால் அதிகரித்தது.

(ஆ) மற்றும் (இ) எம்ஃபில்ஃ, பிஎச்டி கற்கை நெறிகளில் பயிலும் நேரடி மாணவர்களின் எண்ணிக்கை 14 நேரடியல்லாத மாணவர்களின் எண்ணிக்கை 6, 2009 இல் இக்கற்கை நெறிக்கு பதிவு செய்த மாணவர்களின் எண்ணிக்கை ஒன்று (நேரடியல்லாத மாணவர் என்போர்) வேறு உயர் கல்வி நிறுவனங்களில் பதிவு செய்து ஐபீஎம்பீயில் ஆய்வுப் பணிகளில் ஈடுபடுவோராவர்).

எம்ஃபில் மற்றும் பிஎச்டி பட்ட கற்கை நெறிகளுக்கு விண்ணப்பிக்கும் அனைத்து மாணவர்களும் அக்கற்கை நெறிகள் தொடர்பாக இந்நிறுவனத்தில் அமுலிலுள்ள ஒழுங்குவிதிகளுக்கமைய முதலில் எம்ஃபில் கற்கை நெறிக்கு பதிவு செய்யப்படுவர்.

அதன்பின்னர், அவர்களுடைய முன்னேற்றத்தையும் பதிவுசெய்த விண்ணப்பத்தையும் பொருத்து அவர்களுடைய பதிவுகள் பிஎச்டி கற்கை நெறிக்கு தரமுயர்த்தப்படும். சில மாணவர்கள் எம்ஃபில் பட்டத்துடன் தமது கல்வியை முடிவுறுத்திக்கொள்கின்றனர்.

இக்கற்கை நெறிகளின் ஆகக்கூடிய மற்றும் ஆகக்குறைந்த காலம் மாணவர் அவற்றை முழு நேரமாகவோ அல்லது பகுதி நேரமாகவோ பயில்கின்றனர் என்பதைப் பொருத்ததாகும்.

அதன்படி கற்கை நெறிகளின் காலம் பின்வருமாறு :-

| | | எம்ஃபில் | பிஎச்டி |
|---|---|---|---|
| முழு நேர | (ஆகக் குறைந்த) | 2 வருடம் | 2 வருடம் 9 மாதம் |
| | (ஆகக் கூடிய) | 3 1/2 வருடம் | 5 வருடம் |
| விஸ்தரிப்பு | | 2 வருடம் | 2 வருடம் |
| விஸ்தரிப்புடன் | (ஆகக் கூடிய) | 5 1/2 வருடம் | 7 வருடம் |
| பகுதி நேர | (ஆகக் குறைந்த) | 3 வருடம் | 3 வருடம் 9 மாதம் |
| | (ஆகக் கூடிய) | 5 வருடம் | 7 வருடம் |
| விஸ்தரிப்பு | | 2 வருடம் | 2 வருடம் |
| விஸ்தரிப்புடன் | ஆகக் கூடிய | 7 வருடம் | 9 வருடம் |

ஒரு மாணவர் குறித்த காலப்பகுதியினுள் கற்கை நெறியை பூர்த்தி செய்யாது மரணிப்பாராயின், அவர் கற்கை நெறியை கைவிட்டதாகக் கருதப்படும்.

ஒரு மாணவர் தனது கற்கை நெறியை பூர்த்தி செய்வதற்கு விண்ணப்பிப்பதற்கு அவர் குறைந்தபட்ச காலத்தை பூர்த்தி செய்ய வேண்டிய அதேவேளை ஆகக்குறைந்த மற்றும் விரிவுபடுத்தப்பட்ட காலம் அடங்கலான ஆகக்கூடிய காலப்பகுதியினுள் கற்கை நெறியை பூர்த்தி செய்ய வேண்டும். பதிவு முழு நேரமானதாகவோ அல்லது பகுதி நேரமானதாகவோ இருக்க வேண்டுமென்பது அந்தந்த ஆராய்ச்சிகளின் தன்மை நிதி ஏற்பாடுகள் மற்றும் மாணவர்கள் தமது தொழில்களிலிருந்து விடுகை பெறுதல் ஆகியவற்றில் தங்கியுள்ளது.

2009 ஆம் ஆண்டளவில் தமது கற்கை நெறிகளை பின்பற்றிய அனைத்து மாணவர்களும் தத்தமது கற்கை நெறிக் காலப்பகுதியினுள்ளேயே இருந்தனர்.

(ஈ) இணங்குகிறோம்.

(உ) கருத்திட்டங்களின் உரிய காலப்பகுதிகள் முடிவுற்றிருக்காததால் அவை குறித்துரைக்கப்பட்டவாறு நடைபெற்று வந்தன.

(ஊ) உள்ளக விரிவுரையாளர்களால் நடாத்தப்படுவதற்கென திட்டமிடப்பட்ட 755 விரிவுரைகள் / ஒப்படை / விளக்க வகுப்பு மணித்தியாலங்களுள் 4 மணித்தியால விரிவுரை 2010 இல் நடத்தப்படுகிறது. (கலாநிதி ஜகத் வீரசேன கல, மூலக்கூற்றுநோய் எதிர்ப்பியல் கற்கை நெறி).

(ஊ) இணங்குகிறோம்.

**4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

பணிப்பாளருக்கு எடுத்துக்காட்டப்பட்ட குறைபாடுகள் நிறுவகத்தின் கணக்காய்வுக் குழுவிற்கும் முகாமைத்துவ சபைக்கும் அனுப்பி வைக்கப்பட்டதோடு, அவர்களது அறிவுரைகளின்படி உரிய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. படிகளின் கொடுப்பனவு தொடர்பாக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவிடம் ஆலோசனை கோரப்பட்டுள்ளது.

(பேராசிரியர்) கே. எச். தென்னகோன்,
பணிப்பாளர்.

பிரதி:
01. திருமதி விதானகே - கணக்காய்வு அத்தியட்சகர்,
அரசாங்க கணக்காய்வுக் கிளை,
கொழும்பு பல்கலைக்கழகம்.
02. செயலாளர் - உயர்கல்வி அமைச்சு
03. செயலாளர் - நிதி, திட்டமிடல் அமைச்சு
04. தலைவர் - பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு
05. உப வேந்தர் - கொழும்பு பல்கலைக்கழகம்

8-586

---

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

### 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டம்

"எஸ். என்ட் எஸ். ஏஜென்சீஸ் (பிறைவேட்) லிமிட்டெட்" ஐ நீக்கிவிடுவதற்கான 394 (3) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 2006.05.31 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட "எஸ். என்ட் எஸ். ஏஜென்சீஸ் (பிறைவேட்) லிமிட்டெட்" எனும் கம்பனி இயங்காமல் இருப்பதாக அல்லது வியாபாரம் மேற்கொள்ளாமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு நம்ப முடிகிறது.

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 394 (3) ஆம் பிரிவின் கீழ் கம்பனிகள் பதிவாளர் மாஅதிபதி டயஸ் கருணாரத்ன ஹெட்டியாராச்சி ஆகிய நான், இத்திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும்போது "எஸ். என்ட் எஸ். ஏஜென்சீஸ் (பிறைவேட்) லிமிட்டெட்" எனும் கம்பனியானது அது ஏன் கலைக்கப்படக் கூடாதென்பதற்கு தகுந்த காரணம் காட்டப்படாதவிடத்து கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி அலுவலகத்திலுள்ள பதிவேட்டிலிருந்து அதனது பெயர் நீக்கப்பட்டு கம்பனி மூடப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை இத்தால் வழங்குகிறேன்.

டி. கே. ஹெட்டியாராச்சி,
கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி.

என்(பீவீஎஸ்) 46307,
கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
"சமாகம் மெதுர"
400, டீ. ஆர். விஜயவர்த்தன மாவத்தை,
கொழும்பு 10,
2011, ஓகத்து 05.

8-689

### 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டம்

புரன்ட்லைன் டெலிகொம் கன்சல்டன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்" ஐ நீக்கிவிடுவதற்கான 394 (3) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 2006.08.14 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட புரன்ட்லைன் டெலிகொம் கன்சல்டன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்" எனும் கம்பனி இயங்காமல் இருப்பதாக அல்லது வியாபாரம் மேற்கொள்ளாமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு நம்ப முடிகிறது.

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 394 (3) ஆம் பிரிவின் கீழ் கம்பனிகள் பதிவாளர் மாஅதிபதி டயஸ் கருணாரத்ன ஹெட்டியாராச்சி ஆகிய நான், இத்திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும்போது புரன்ட்லைன் டெலிகொம் கன்சல்டன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்" எனும் கம்பனியானது அது ஏன் கலைக்கப்படக் கூடாதென்பதற்கு தகுந்த காரணம் காட்டப்படாதவிடத்து கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி அலுவலகத்திலுள்ள பதிவேட்டிலிருந்து அதனது பெயர் நீக்கப்பட்டு கம்பனி மூடப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை இத்தால் வழங்குகிறேன்.

டி. கே. ஹெட்டியாராச்சி,
கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி.

பீவீ 8536,
கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
"சமாகம் மெதுர"
400, டீ. ஆர். விஜயவர்த்தன மாவத்தை,
கொழும்பு 10,
2011, யூலை 19.

8-569

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்*

கணக்கு இல.: 0060 1000 2239 - சரத் மோட்டார்ஸ்

2010, ஓகத்து 26 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் சம்பத் வங்கி லிமிட்டெட் பணிப்பாளர் சபையினால் விசேடமாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் -

"PQ 144 எனும் கம்பனி இலக்கத்தைக் கொண்ட சம்பத் வங்கி பீஎல்சீ சார்பாக கம்பஹா பிரசித்த நொத்தாரிசுவான ஐ. ஐ. ஆர். வேரகொட என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2007, திசெம்பர் 31 ஆந் திகதியிடப்பட்ட இல. 1015 எனும் ஈட்டு முறியின் மீது அடகு வைக்கப்பட்டு பிணையாக இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள் நிலமனைகள் மீது பெற்றுக்கொண்ட கடனை, கடன்பட்டவர் என்ற வகையில் கடமைப்பட்டுள்ள பெயர் மற்றும் வடிவில் "சரத் மோட்டார்ஸ்" எனும் மகுடத்தின் கீழ் இயங்கும் வியாபாரத்தின் ஏக உரிமையாளரான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ரூப்பசிங்ஹ ஆரச்சிகே சந்ரசிரி என்பவர் மீள் செலுத்தத் தவறியுள்ளமையினால், கூறப்பட்ட ஈட்டு முறியின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையை இலங்கையில் சட்டபூர்வமாகச் செல்லுபடியாகும் ரூபாவில் ஒன்பது இலட்சத்து பன்னிரண்டாயிரத்து இருநூற்று ஆறு ரூபா பதின்நான்கு சதம் (ரூ. 9,12,206.14) 2010, யூலை 01 ஆந் திகதி சம்பத் வங்கி பீஎல்சீ இற்குச் செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன் குறிப்பிடப்பட்ட ஒன்பது இலட்சத்து பன்னிரண்டாயிரத்து இருநூற்று ஆறு ரூபா பதின்நான்கு சதம் (ரூ. 9,12,206.14) 2010, யூலை 02 ஆந் திகதி முதல் இல.1015 எனும் ஈட்டு முறியின் மீது அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை ஏழு இலட்சத்து எண்பதாயிரம் ரூபா (ரூ. 7,80,000) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு இருபத்து ஐந்து வீதம் (25%) வருமதியாகவுள்ள வட்டியுடன் விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இல. 1015 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கண்டி உத்தரவுபெற்ற ஏலதாரர்களான ஐ. டபிள்யூ. ஜயசூரிய என்பவர்கள் மூலமாக பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய வேண்டும் என 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமைவாக சம்பத் வங்கி பீஎல்சீ இத்தால் தீர்மானிக்கின்றது."

**அட்டவணை**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், சியனே கோரளே அதிகாரி பத்துவை, மாஹார பிரதேச சபை எல்லைகளுக்குள், (நாரன்வல உப அலுவலகம்) ரண்முத்துகல கிராமத்தில் அமைந்த "தலகாஹா பில்லேவ" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. பி. எல். பெர்ணாண்டோ என்பவரால் தயாரிக்கப்பட்ட 2007.03.22 ஆந் திகதியிடப்பட்ட இல. 8020 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு லொட் X எனக்குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கிற்கு : டீ. எஸ். மாயாதுன்ன என்பவரின் காணி மற்றும் வீதி; கிழக்கிற்கு : டீ. எஸ். மாயாதுன்ன மற்றும் டீ. வை. தஹநாயக்க என்பவர்களின் காணிகள் ; தெற்கிற்கு : டீ. வை. தாஹாநாயக்க என்பவரின் காணி மற்றும் இல. 4438 எனும் வரைபடத்தில் லொட் 1 இன் எஞ்சிய பகுதி மற்றும் ; மேற்கிற்கு : இல. 4438 எனும் வரைபடத்தில் லொட் 1 இன் எஞ்சிய பகுதி மற்றும் வீதி. இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணி விஸ்தீரணம் பதின்நான்கு தசம் எட்டு சைபர் பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 14.80பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன். இல. 8020 எனும் வரைபடத்திற்கு அமைவாக கம்பஹா காணிப் பதிவகத்தில் C 849/14 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

8-694/1

---

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்*

கணக்கு இல.: 0031 5001 2022 - எம். ஜயசிரி மற்றும் ஏ. வை. தீப்பானி

2010, நவெம்பர் 25 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் சம்பத் வங்கி லிமிட்டெட் பணிப்பாளர் சபையினால் விசேடமாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் -

"PQ 144 எனும் கம்பனி இலக்கத்தைக் கொண்ட சம்பத் வங்கி பீஎல்சீ சார்பாக கொழும்பு பிரசித்த நொத்தாரிசுவான சீ. ஜீ. பண்டார என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2007, நவெம்பர் 30 ஆந் திகதியிடப்பட்ட இல. 817 எனும் ஈட்டு முறியின் மீது அடகு வைக்கப்பட்டு பிணையாக இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள் நிலமனைகள் மீது பெற்றுக்கொண்ட கடனை, கடன்பட்டுள்ளார் என்ற வகையில் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மாதிவிலகே ஜயசிரி மற்றும் அல்காஹாவத்தகே சுரேக்கா தீப்பானி என்பவர்களில் கடன்பட்டவர்கள் என்ற வகையில் மேற்கூறப்பட்ட மாதிவிலகே ஜயசிரி என்பவர் மீள் செலுத்தத் தவறியுள்ளமையினால், கூறப்பட்ட இல. 817 எனும் ஈட்டு முறியின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையை இலங்கையில் சட்டபூர்வமாகச் செல்லுபடியாகும் ரூபாவில் இருபது இலட்சத்து எழுபத்து நான்காயிரத்து நாநூற்று அறுபத்திரண்டு ரூபா முப்பத்தொரு சதம் (ரூ. 20,74,462.31) 2010, செத்தெம்பர் 21 ஆந் திகதி சம்பத் வங்கி பீஎல்சீ இற்குச் செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன் குறிப்பிடப்பட்ட இருபது இலட்சத்து எழுபத்து நான்காயிரத்து நாநூற்று அறுபத்திரண்டு ரூபா முப்பத்தொரு சதம் (ரூ. 20,74,462.31) 2010, செத்தெம்பர் 22 ஆந் திகதி முதல் இல. 817 எனும் ஈட்டு முறியின் மீது அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை பதினெட்டு இலட்சத்து தொண்ணூற்று மூவாயிரத்து நாற்பத்திரண்டு ரூபா முப்பத்தொரு சதம் (ரூ. 18,93,042.31) இத்துடன் மேலதிக வட்டியாக

ஆண்டொன்றிற்கு இருபது வீதம் (20%) வருமதியாகவுள்ள வட்டியுடன் விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இல. 817 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ. கே. ஈ. சேனாபத்தி என்பவர்கள் மூலமாக பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய வேண்டும் என 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமைவாக சம்பத் வங்கி பீஎல்சீ இத்தால் தீர்மானிக்கின்றது.''

### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோறளையின் உடுகாஹா பத்துவின், ஹோமாகமை நகர சபை எல்லைகளுக்குள் கிரிகம்பமுனுவ கிராமத்தில் அமைந்த ''கபோராலலாகே கனத்த'' என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எல். விக்கிரமரத்ன என்பவரால் தயாரிக்கப்பட்ட 2007, ஓகத்து 24 ஆந் திகதியிடப்பட்ட இல. 1533 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் A எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாகவன - வடக்கிற்கு : இல. 3228 எனும் வரைபடத்தில் லொட் 1A; கிழக்கு : இல. 3228 எனும் வரைபடத்தில் லொட் 1D மற்றும் லொட் 1N (20 அடிகள் அகல வீதி) ; தெற்கிற்கு : இல. 6718 எனும் வரைபடத்தில் லொட் 2 மற்றும் ; மேற்கிற்கு : எம். பீ. பெரேரா என்பவரின் சொத்து. ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் பதினொரு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 11பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன். கூறப்பட்ட இல. 1533 எனும் வரைபடத்திற்கு அமைவானதாகும்.

கூறப்பட்ட லொட் A கீழே விபரிக்கப்பட்ட காணியின் மீள் அளவீடாகும் :-

மேற்கூறப்பட்ட கிரிகம்பமுனுவ கிராமத்தில் அமைந்த ''கபோராலலாகே கனத்த'' என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ. ஈ. விஜேசூரிய என்பவரால் தயாரிக்கப்பட்ட 1990, ஓகத்து 09 ஆந் திகதியிடப்பட்ட இல. 3228 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1B எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாகவன - வடக்கிற்கு : லொட் 1A; கிழக்கு : லொட் 1D மற்றும் லொட் 1N (20 அடிகள் அகல வீதி) ; தெற்கிற்கு : இல. 6718 எனும் வரைபடத்தில் லொட் 2 மற்றும் ; மேற்கிற்கு : எம். பீ. பெரேரா என்பவரின் சொத்து. ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் பதினொரு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 11பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன். கூறப்பட்ட இல.3228 எனும் வரைபடத்திற்கு அமைவாக ஹோமாகம காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் N 190/207 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

8-694/3

## வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி

1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிக் கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

கணக்கு இல.: 0036 5000 2988 - ஜே. எஸ். டானியல் மற்றும் எஸ். கே. டானியல்

வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி பணிப்பாளர்கள் சபையால் 2004, யூன் 23 ஆந் திகதியன்று நடைபெற்ற கூட்டத்தில் விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்படுகிறது -

''கடப்பாடுடையவர்களான இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு, கொழுமபு 6, நிஹால் சில்வா மாவத்தை, இல. 15 ஐச் சேர்ந்த வத்துதந்திரிகே சயனா குஷிலானி டானியல் மற்றும் ஜோ சிட்னி டானியல் ஆகியோர் வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி சார்பில், கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு கே. எஸ். பீ. டபிள்யூ. ஜயவீர அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2001, மே 11 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டுமுறி இல. 1493 இன் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்களாத லாலும், 2004, மாச்சு 4 ஆந் திகதியன்று உள்ளவாறு வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கிக்கு சொல்லப்பட்ட முறி மூலம் இருபத்து மூன்று இலட்சத்து எண்பத்தொன்பது ஆயிரத்து நூற்று நான்கு ரூபா எழுபத்துமூன்று சதம் (ரூ. 23,89,104.73) கொண்ட தொகை தற்போது வரவேண்டியும் உரியதாகவுமுள்ளதாதலாலும்; 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அளிக்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி பணிப்பாளர்கள் சபையானது, சொல்லப்பட்ட தொகை இருபத்து மூன்று இலட்சத்து எண்பத்தொன்பது ஆயிரத்து நூற்று நான்கு ரூபா எழுபத்துமூன்று சதம் (ரூ. 23,89,104.73) ஐ, மேலும் 2004, மாச்சு 5 ஆந் திகதியிலிருந்து விற்பனை திகதி வரை இருபத்திரண்டு இலட்சத்து நான்காயிரத்து இருநூற்று எண்பத்தேழு ரூபா ஐம்பத்தொட்டு சதம் (ரூ. 22,04,287.58) கொண்ட தொகை மீது ஆண்டுக்கு பதினாறு தசம் ஐந்து சதவீதம் (16.5%) வட்டியுடனும் விளம்பரச் செலவுகள் மற்றும் உறப்பட்ட வேறு கட்டணங்கள் (எவையேனும் கொடுப்பனவுகள் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்து) ஆகியவற்றுடனும் சேர்த்து அறவிடுவதற்காக, இல. 1493 ஐக் கொண்ட சொல்லப்பட்ட முறியினால் வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ளதும் இத்துடனுள்ள அட்டவணையில் முழுமையாக விவரிக்கப்பட்டதுமான ஆதனம் மற்றும் வளவுகள், கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் டன்ஸ்டன் கெலார்ட் அவர்களால் பகிரங்க ஏலமூலம் விற்பனை செய்யப்பட்ட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது.''

### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோறளை, பள்ளே பற்று, தெஹிவளை- கல்கிசை மாநகர சபை எல்லைகளுக்குள் வட்டார இல. 15 (கவுடான கிழக்கு), அத்திடியவில் அமைந்துள்ளதும் கவுடான 1 ஆவது குறுக்குத் தெரு, வரிமதிப்பு இல. 127/21 ஐ தற்போது கொண்டதும் ''அத்திடிய வெல்யாய மற்றும் வெட்டகெய்யாவ கும்புற'' என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ரி. எஸ். ஈ. விஜேசூரிய அவர்களால் தயாரிக்கப்பட்டு 1988, செத்தெம்பர் 14 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 1390 இல் குறிப்பிடப்பட்டு துண்டு எல் 77 என அடையாளமிடப்பட்டதுமான பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும். அதன்கண்

அமைந்துள்ள மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் எல்லா வற்றுடனும் சேர்த்து. சொல்லப்பட்ட துண்டு எல் 77 இன் எல்லைகளாவன- வடக்கு : துண்டு எல் 65 மற்றும் துண்டு எல் 66 ; கிழக்கு : துண்டு எல் 111 (வீதிக்கான ஒதுக்கு) ; தெற்கு : துண்டு எல் 84; மேற்கு : துண்டு எல் 78. இது, சொல்லப்பட்ட வரைபடம் இல. 1390 இற்கமைய எட்டு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 8பே.) விஸ்தீரணமுடையது. கல்கிஸ்ஸை காணிப் பதிவகத்தில் தொகுதி/ பக்கம் எம் 2532/ 86 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கல்கிஸ்ஸை காணிப் பதிவகத்தில் எம் 1936/ 18 இல் பதிவு செய்யப்பட்டுள்ள சொல்லப்பட்ட வரைபடம் இல. 1390 இல் குறிப்பிடப்பட்டுள்ள துண்டு எல் 113 (வீதிக்கான ஒதுக்கு), எம் 1704/ 248 இல் பதிவு செய்யப்பட்டுள்ள சொல்லப்பட்ட வரைபடம் இல. 1390 இல் குறிப்பிடப்பட்டுள்ள துண்டு எல் 111 (வீதிக்கான ஒதுக்கு), எம் 1918/ 209 இல் பதிவு செய்யப்பட்டுள்ள வரைபடம் இல. 1388 இல் குறிப்பிடப்பட்டுள்ள துண்டு எம் (வீதிக்கான ஒதுக்கு), எம் 1918/ 208 இல் பதிவு செய்யப்பட்டுள்ள உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ரி. எஸ். ஈ. விஜேசூரிய அவர்களால் தயாரிக்கப்பட்டு 1988, பெப்புருவரி 26 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 1344 இல் குறிப்பிடப்பட்டுள்ள துண்டு 14 (வீதிக்கான ஒதுக்கு), எம் 1825/ 266 இல் பதிவு செய்யப்பட்டுள்ள சொல்லப்பட்ட வரைபடம் இல. 1334 இல் குறிப்பிடப்பட்டுள்ள துண்டு 1, எம் 1936/ 17 இல் பதிவு செய்யப்பட்டுள்ள சொல்லப்பட்ட வரைபடம் இல. 1334 இல் குறிப்பிடப்பட்டுள்ள துண்டு 12 (வீதிக்கான ஒதுக்கு), எம் 1936/ 181 இல் பதிவு செய்யப்பட்டுள்ள சொல்லப்பட்ட வரைபடம் இல. 1334 இல் குறிப்பிடப்பட்ட துண்டு 11 ஆகியவற்றிலும் மீதும் வழியேயுமான குடியுரிமையுடன் சேர்த்து.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

8-694/ 2

---

## ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ.

(ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட் என முன்பு அறியப்பட்டது)

### 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

(குளியாபிட்டி கிளை) - ஆசிரி ஷியாவாஸ் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்

ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையினால், 2011, யூலை மாதம் 28 ஆந் திகதியன்று நடாத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம் .-

'' ஆசிரி ஷியாவாஸ் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட் கடப்பாடுடையவர்களாக ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. சார்பில், குருநாகல் பிரசித்த நொத்தாரிசு ஈ. எஸ். ரேக்காவவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2006, யூன் 08 ஆந் திகதியிடப்பட்ட 11749 ஆம் இலக்க முறி, (ஆதனம் குறித்து இத்துடனான முதலாவது அட்டவணையில் மேலதிகமாக விபரிக்கப்பட்டுள்ளது) மற்றும் குருநாகல் பிரசித்த நொத்தாரிசு எஸ். எஸ். ஹேவாபதிரணவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2010, மார்ச் 31 ஆந் திகதியிடப்பட்ட 2375 இலக்க முறி (ஆதனம் குறித்து இத்துடனான இரண்டாம் அட்டவணையில் மேலதிகமாக விபரிக்கப்பட்டுள்ளது) என்பன மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்கள். ஆதலாலும், 2011, மே 31 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறிகள் மீது ஐம்பத்து இரண்டு இலட்சத்து எண்பத்து ஐயாயிரத்து ஐந்நூற்று ஐம்பத்து ஆறு ரூபா அறுபது சதம் (ரூபா 52,85,556.60) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும் சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டதும் சொல்லப்பட்ட 11749 மற்றும் 2375 ஆம் இலக்க முறிகள் மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டன வுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூபா 52,85,556.60 பணத்தொகையை 2011, யூன் 01 ஆந் திகதியில் இருந்து விற்பனை நாள் வரை, அதன் மீதான மேலும் வட்டியுடனும் விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோ டும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக கொழும்பு உரிமம் பெற்ற ஏல விற்பனையாளர் ஐ. டபிள்யூ. ஜயசூரியவினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கின்றது.''

#### முதலாவது அட்டவணை

வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டத்தின் சிலாப காணி பதிவுப் பிரிவிற்கு உட்பட்ட பிற்றிகல் கோறள வடக்கின் ஆனைவிழுந்தான் பற்றுவின் சிலாபம் நகர சபைக்கு உட்பட்ட கோட்டை வீதியின் 31(2304) வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்டுள்ள கொட்டடி சந்தி காணி என அழைக்கப்படும் காணி, உரிமம் பெற்ற நிலஅளவையாளர் வி. பெரேராவினால் தயாரிக்கப்பட்ட 30.08.1967 ஆந் திகதியிடப்பட்ட 3084 ஆம் இலக்க வரைபடத்தில் விபரமாக விளக்கப்பட்டுள்ள வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள் - வடக்கு: 1835 ஆம் இலக்க வரைபடத்தில் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணி, 33(2305) வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்டுள்ள ஆர். எச். ஏ. பர்ணாண்டோவிற்குச் சொந்தமான காணி ; கிழக்கு : கோட்டை வீதி ; தெற்கு : 29(2303) வரிமதிப்பீட்டிலக்கத்தைக்கொண்டுள்ள எம். மரிக்காரின் காணி ; மேற்கு : பசில் ஈ. பின்ரோவிற்குச் சொந்தமான காணி. அத்துடன் சிலாபம் காணிப்பதிவகத்தில் டி 141/160 இன் கீழ் பதிவு செய்யப்பட்ட இரண்டு தசம் ஐந்து பூஜ்யம் பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 2.50பே.) விஸ்தீரணம் கொண்டதுமான ஆதனத்துடனான கட்டடங்கள் மற்றும் அத்துடனான எல்லாம். உரிமம் பெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. ரி. ரி. பர்ணாண்டோவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 11.06.1980 ஆந் திகதியிடப்பட்ட 1366 ஆம் இலக்க அடமான உறுதி, அடமானம் வைக்கப்பட்டவரின் வசமானதுமான ஆதனம்.

#### இரண்டாவது அட்டவணை

வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டத்தின் சிலாப காணி பதிவுப் பிரிவிற்கு உட்பட்ட பிற்றிகல் கோறள வடக்கின் முன்னேஸ்வரம் பற்றுவின் மாதம்பை பிரதேச சபைக்கு உட்பட்ட இனிகொடவல கிராமத்தில் உள்ள ''இனிகொடவெல எஸ்டேட்'' என அழைக்கப்படும் காணி, உரிமம் பெற்ற நிலஅளவையாளர் எம். எம். பீ. டி. பெரேராவினால் தயாரிக்கப்பட்ட 07.08.2004 ஆந் திகதியிடப்பட்ட 4586 ஆம் இலக்க வரைபடத்தில் விபரமாக விளக்கப்பட்டுள்ள 3 மற்றும் 4 என அடையாளம் இடப்பட்ட அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள் - வடக்கு:

சொல்லப்பட்ட வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 2 ; கிழக்கு : கொழும்பில் இருந்து சிலாபத்திற்கு செல்லும் பெருந்தெரு; தெற்கு : சொல்லப்பட்ட வரைபடத்தில் உள்ள காணித்தண்டு 11 (15 அடி அகலமான வீதி) ; மேற்கு : சொல்லப்பட்ட வரைபடத்தில் உள்ள காணித்துண்டுகள் 5 மற்றும் 6. அத்துடன் காணித்துண்டு 11 என அடையாளம் இடப்பட்டடதும், சிலாபம் காணிப் பதிவகத்தில் சி 198/49 இன் கீழ் பதிவு செய்யப்பட்ட முப்பது பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 30பே.) விஸ்தீரணம் கொண்டதுமான ஆதனத்துடனான பாதை உரிமையுடன் சேர்ந்த ஆதனம்.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி.பொ.மு (சட்டம்) /சபைச் செயலாளர்.

8-699/1

---

## ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ.

(ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட் என முன்பு அறியப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

(தெமட்டகொடை கிளை) - விஜயவர்தன சமரசிங்க லேக்கம் ஆராச்சிகே தனுக்க ரஞ்சித் சமரசிங்க

ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையினால், 2010, ஒற்றோபர் மாதம் 28 ஆந் திகதியன்று நடாத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம் .-

" விஜயவர்தன சமரசிங்க லேக்கம் ஆராச்சிகே தனுக்க ரஞ்சித் சமரசிங்க கடப்பாடுடையவராக ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. சார்பில், கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எம். எல். டி. குணதிலகவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2006, சனவரி 03 ஆந் திகதியிடப்பட்ட 1485 ஆம் இலக்க முறி மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார். ஆதலாலும், 2010, செத்தெம்பர் 06 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறி மீது முப்பத்தேழு இலட்சத்து ஐம்பதாயிரத்து நூற்றுப் பத்து ரூபா எழுபத்தொன்பது சதம் (ரூபா 37,50,110.79) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும் சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டதும் சொல்லப்பட்ட 1485 ஆம் இலக்க முறி மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூபா 37,50,110.79 பணத்தொகையை 2010, செத்தெம்பர் 07 ஆந் திகதியில் இருந்து விற்பனை நாள் வரை, மேலும் வட்டியுடனும் விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக கொழும்பு உரிமம் பெற்ற ஏல விற்பனையாளர் டலஸ் கெலாட்டினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கின்றது."

### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தின் சல்பிற்றி கோறளை, பள்ளே பற்றுவின் ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே நகர சபை எல்லைக்கு உட்பட்ட வெலிக்கடவில் உள்ள ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தையின் 411/15பி, வரிமதிப்பீட்டிலக்கத்தில் உள்ள பெலன்கஹாவத்த மற்றும் பெலிகஹாகும்புர கெபல்லகஹாகும்புர மற்றும் திகனஹீனல என அழைக்கப்படும் காணியுடனான கட்டடங்கள் மற்றும் அத்துடனான எல்லாம். உரிமம் பெற்ற நிலஅளவையாளர் கே. எம். சமரசிங்கவினால் தயாரிக்கப்பட்ட 12.05.1964 ஆந் திகதியிடப்பட்ட 1137 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 4 என விபரமாக விளக்கப்பட்டுள்ள, அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள் - வடக்கு: உரிமம் பெற்ற நிலஅளவையாளர் கே. எம். சமரசிங்கவினால் தயாரிக்கப்பட்ட 23.08.1961 ஆந்திகதியிடப்பட்ட வரைபட இலக்கம் 800 இல் விபரமாக விளக்கப்பட்டுள்ள 30 அடி அகலமான வீதிக்கான ஒதுக்கீடு ; கிழக்கு : காணித்துண்டு 5 ; தெற்கு : லீலாவதி ஆட்டியகலவின் அதே காணியின் காணித்துண்டு டி ; மேற்கு : காணித்துண்டு 3, அத்துடன் சொல்லப்பட்ட 1485 ஆம் இலக்க முறியின் இரண்டாம் அட்டவணையில் மேலதிகமாக விபரிக்கப்பட்டதற்கு அமைவான பாதை உரிமையுடன் சேர்ந்த மற்றும், கல்கிசை காணிப் பதிவகத்தில் எம். 2868/142 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்ட இருபது பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 20பே.) விஸ்தீரணம் கொண்டதுமான ஆதனம்.

அத்துடன் முன்சொல்லப்பட்ட 1485 ஆம் இலக்க முறியின் இரண்டாவது அட்டவணையில் மேலதிகமாக விபரிக்கப்பட்டதற்கு அமைவாக பாதை உரிமையுடன் சேர்த்து.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி.பொ.மு (சட்டம்) /சபைச் செயலாளர்.

8-699/2

---

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.